தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி
(த.வ.1-1)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

திருவள்ளுவராண்டு 2056/குரோதி/சித்திரை-01
அரசுக் கடித எண்.9030988/தவ.1-1/2025-1, நாள் 14.04.2025

அனுப்புநர்
திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்கள் /
முதன்மை செயலாளர்கள் / செயலாளர்கள் /
அனைத்து தலைமைச் செயலக துறைகள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்.(இணைப்புடன்)

ஐயா / அம்மையீர்,

பொருள்: தமிழ் வளர்ச்சி – ஆட்சிமொழி திட்ட செயலாக்கம் – வெளியிடப்பட்ட அரசாணைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.2070, கல்வி (தமிழ் வளர்ச்சி)த் துறை, நாள் 02.12.1971.
2. அரசாணை (நிலை) எண் 371, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் 31.10.1986.
3. அரசாணை (நிலை) எண் 182, தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறை, நாள் 27.06.1989.
4. அரசாணை (நிலை) எண் 41, தமிழ் வளர்ச்சி – பண்பாடு (ம) அறநிலையத்துறை, நாள் 20.02.2008.
5. அரசுக் கடித (நிலை) எண் 12/த.வ.1.1/2021-1, நாள் 22.01.2021.
6. தலைமைச் செயலாளரின் அரசுக் கடித (நிலை) எண்.66/த.வ.1.1/2021-1, நாள் 12.07.2021 அனைத்து தலைமை செயலக துறைகள் / துறைத் தலைமை அலுவலர்களுக்கும் முகவரியிடப்பட்டது.
7. தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்பு நாள் 18.03.2025.

------

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதங்களின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

(த.பி.பா)

2. தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், அரசு அலுவலகங்களில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்மொழியை பயன்படுத்தவும் கீழ்காணும் அறிவுறுத்தல்களை தவறாது பின்பற்றுமாறு தங்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது:-

- அரசாணைகள் தமிழில் மட்டுமே வெளியிடப்படல் வேண்டும்.
- சுற்றாணைக் குறிப்புகள் தமிழிலேயே இருக்கவேண்டும்.
- துறைத் தலைமை அலுவலகங்களிலிருந்து அரசு மற்றும் பிற அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கருத்துரைகள் தமிழிலேயே இருக்க வேண்டும். வெளியிடப்படும் கடிதங்கள், அலுவலக ஆணைகள் மற்றும் இதர கடிதம் போக்குவரத்துகள் ஆகியவை விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர எல்லா இனங்களிலும் தமிழில் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- பொதுமக்களிடமிருந்து தமிழில் வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுதுவதுமில்லாமல் அவை பற்றிய குறிப்புகள் யாவும் தமிழிலேயே இருக்க வேண்டும்.
- அரசுப் பணியாளர்கள் அனைத்து இனங்களிலும் தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும்.
- மேலும் ஆங்கிலத்தில் வெளியிட விலக்களிக்கப்பட்டுள்ள இனங்களுக்கு நேர்வுக்கேற்ப தலைமைச்செயலகத் துறைகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் அரசாணைகளை தமிழில் வெளியிடுவதற்கு ஏதுவாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மொழிபெயர்ப்பு பிரிவு மூலம் தமிழாக்கம் செய்வதற்கு அனுப்பிவைக்கவும் அல்லது அந்தந்த துறைகளாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்படும் அரசாணைகளை தேவைப்படின் கூர்ந்தாய்வு செய்யும் பொருட்டு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மொழிபெயர்ப்பு பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

14/4/25

அரசு செயலாளருக்காக.

14/4/25